# தசாவதாரம்

மறைகள்நான்கினையும்மதுகைடபர்களிருவரும்
மறைத்தே வைத்தனர் ஆழ்கடலுக்கடியில்
திரைகள் ஏறி இறங்கிடும் கடலதில் மீனமாய் சென்று
இறைவனும் மீட்டான் வேதங்கள் நான்கையும்!

மந்திரமலைதனை மத்தாக்கி வாசுகியும் நாணாகி
உன்திரண்ட முதுகினில் கூர்மமாய்த் தாங்கி
தந்திரமாய் அமுதினை எடுத்து வானவர்க்கு
தந்திட்ட பெருமானே உன் திறன் யாரறிவார்?

ஏட்டில் அடங்காவுன்புகழும் திறனு மென்றாகி
கோட்டில் உலகைத்தாங்கி நீர் ஆழ்கடலிலிருந்து
ஏனமாய் வெளிப்பட்டு பூமகளைக் காத்தச்செயல்
வானவரும் மற்ற உயிர்களும் உய்யத்தானே!

படீரென்று பிளந்த தூணிலிருந்து வெளிப்பட்டு
திடீரென்று அரக்கன் முன் சிம்மமாய்த் தோன்றி
பளீரென்ற நகங்களால் அவனுடல் கிழித்து
கலீரென்றுசப்தித்து மகிழ்ந்த நரசிம்மன் நீயன்றோ!

சிறிய உருவுடன் மாவலிமுன் வந்து வாமனனாய்
மூவடிமண் கேட்டு மாமன்னனும் தர இசைய
பெரிய உருகொண்டு ஈரடியால் அதுமுடியாததால்
சேவடியை மன்னன் திருமுடியில் வைத்த பரமனே!

தந்தையைக்கொன்ற க்ஷத்திரியரை அழித்திட
பரசுதனைக் கொண்டு அத்தலைமுறையேயில்லாமல்
மந்தையாக அனைவரையும் கொன்று யாகம் நடத்திய
பரசுராமனே நீயளித்த நிலமதை யாசித்து வாழ்வதென்ன

மானிடர், ஒருவனுக்கு ஒருத்தியென்று உணர்த்த
மான்விழியாள் சீதையைவில்முறித்து, கரம் பிடித்து
மானொன்றால் சிறைபட்ட தாயும் மீட்டான்
வானரச்சேனை துணையுடனே இராமனாயிருந்து!

கண்ணனுக்கு முன்பிறந்து பாலலீலையாவும் புரிந்து
அத்தினாபுரத்தைச் சாய்த்து ப்ரலம்பனையும் வீழ்த்தி
அண்ணன் பலராமனாய் செயல் பல முடித்த
அத்திறத்தைப் புகழ ஆயிரநா கொண்டவனாலும் முடியாதன்றோ!

கார்முகில் வண்ணனே பாஞ்சாலி துயர் துடைக்க
தேர்மீதமர்ந்து சங்கது வாய்வைத்தூதினாய்
பார்புகழும் கீதைதனை விஜயனுக்கருளி
பார்த்தசாரதியாய் அவதரித்தவன் நீயன்றோ!

அதர்மம் தலைதூக்கும் நாளில் தோன்றி அற்பப்
பதர்களையழிப்பேன் என்றுகூறிய திருமாலே
சிதறி சீர்குலைந்த தர்மத்தைக் காக்க
பதறி குதிரை மீது கல்கியாய் வந்து அருள்வாயே!